www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Tsi11Eco

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம்

பொருளியல்

மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 20×1=20

1) பொருளாதாரத்தின் தந்தை யார்?
a) மாக்ஸ் முல்லர் b) ஆடம் ஸ்மித் c) கார்ல் மார்க்ஸ் d) பால் அ சாமுவேல்சன்

2) தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை
a) பகுத்தாய்வு முறை b) தொகுத்தாய்வு முறை
c) இயல்புரை அறிவியல் d) நெறியுரை அறிவியல்

3) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு
a) குறைவாக b) உச்சமாக c) பூஜ்ஜியமாக d) எதிர் மறையாக

4) சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்
a) ஹிக்ஸ் b) ஆலன் c) கீன்ஸ் d) எட்ஜ் வொர்த்

5) ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி
a) இறுதிநிலை உற்பத்தி b) மொத்த உற்பத்தி
c) சராசரி உற்பத்தி d) ஆண்டு உற்பத்தி

6) பொருளின் விலைக்கும், அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
a) எதிர்மறை b) நேர்மறை c) பூஜ்யம் d) அதிகரிக்கும்

7) சராசரிச் செலவுக்கான வாய்ப்பாடு
a) AVC/Q b) TC/Q c) TVC/Q d) AFC/Q

8) நீண்ட கால சராசரி செலவுக் கோடு ______ கோடு என அழைக்கப்படுகிறது
a) தேவை b) திட்ட c) உற்பத்தி d) விற்பனை

9) எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?
a) TR < TC b) TR - MC c) TR > TC d) TR = TC

10) கீன்ஸின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு வழங்கப்படுகிறது
a) துய்ப்பு தவிர்ப்பு கோட்பாடு b) நீர்மை விருப்பக் கோட்பாடு
c) கடன் நிதிக் கோட்பாடு d) ஏஜியோ கோட்பாடு

11) இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்
a) நிலம் b) அமைப்பு c) மூலதனம் d) உழைப்பு

12) மக்கள் தொகையில் 1961ஆம் வருடம் ______ எனப்படுகிறது
a) சிறிய பிரிவினை வருடம் b) மக்கள் தொகை வெடிப்பு வருடம்
c) நகரமயமாதல் வருடம் d) பெரும் பிரிவினை வருடம்

13) காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?
a) ஜவஹர்லால் நேரு b) VKRV இராவ்
c) JC குமரப்பா d) A.K. சென்

14) இரயத்வாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
a) கேரளா b) வங்காளம் c) தமிழ்நாடு d) மகாராஸ்டிரா

15) இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்
a) M.S.சுவாமிநாதன் b) காந்தி
c) விஸ்வேஸ்வரையா d) N.R.விஸ்வநாதன்

16) உலக அளவில் இந்தியா ______ உற்பத்தியில் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது
a) பழங்கள் b) மதுப்பொருட்கள் c) காப்பி d) தேயிலை

17) ஊரக பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரி அளவு
a) 2100 b) 2000 c) 2300 d) 2400

18) 'இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான் இச்சொற்றடரைக் கூறியவர் யார்?
a) ஆடம்ஸ்மித் b) காந்தி c) அமர்த்தியா சென் d) சர் மால்கம் டார்லிங்

19) தென்னக இரயில்வேயின் தலைமையிடம்
a) திருச்சி b) சென்னை c) மதுரை d) கோயம்புத்தூர்

20) $(Y-Y_1) = m(X-X_1)$ என்பது ______ குறிக்கும்
a) சாய்வை b) நேர்கோட்டை c) மாறிலியை d) வளைகோட்டை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



## பகுதி - II

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 30வது வினா கட்டாய வினா: 7×2=14

21) பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
22) விருப்பங்களை வகைப்படுத்து.
23) உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து.
24) வருவாயை வரையறு.
25) உபரி சக்தி - விளக்குக.
26) இலாபம் என்றால் என்ன?
27) மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளைக் கூறுக.
28) குடிசை தொழில் - வரையறு.
29) தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?
30) இயற்கை வளங்களின் வகைகள் யாவை?

## பகுதி - III

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 40வது வினா கட்டாய வினா: 7×3=21

31) பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.
32) நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
33) காப்-டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.
34) நீண்ட கால செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.
35) காத்திருத்தல் வட்டிக் கோட்பாட்டை எழுதுக.
36) சமூகக் கட்டமைப்புகளை விளக்குக.
37) புதிய வர்த்தக கொள்கையின் சாராம்சத்தை விளக்குக.
38) மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக.
39) தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
40) வாங்குவோர் முற்றுரிமை என்றால் என்ன?

## பகுதி - IV

IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி: 7×5=35

41) a) பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.

(OR)

b) பல்வேறுபட்ட விலை நிலைகளின் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

42) a) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.

(OR)

b) முற்றுரிமை போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை வரைபடத்துடன் விவரி.

43) a) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.

(OR)

b) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.

44) a) மொத்தச் செலவு = $10+Q^3$, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.

(OR)

b) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன?

45) a) நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக.

(OR)

b) ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.

46) a) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

(OR)

b) 2015-2020ம் ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

47) a) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.

(OR)

b) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com